RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt20213

# ஆண்டாள் பாசுரங்கள் உணர்த்தும் பக்திநெறி வாழ்வியல் – ஓர் ஆய்வு

## பீ. பெரியசாமி [அ,*]

[அ] தமிழ்த்துறை, டி.எல்.ஆர். கலை மற்றும் அறிவியல் கல்லூரி, விளாப்பாக்கம் - 632521, தமிழ்நாடு, இந்தியா.

# Analyzing the Devotional Biology of Andalusian Lice - A Study

## B. Periyaswamy [a, *]

[a] Department of Tamil, DLR Arts and Science College, Villapakkam -632521, Tamil Nadu, India

Corresponding Author:
periyaswamydeva@gmail.com

Received : 09-01-2020
Accepted : 04-03-2020

**ABSTRACT**

In the liturgy of Andal worship, administrative management is performed to create a plan, place, time, assurance, implementation, and so on. Love is one of the goals that God has set out to accomplish, because both love and devotion are matures of love for God. The love of the head of world relations is pure. Not selfish. Such a state of pure love is rooted in the pastures. Here, after the sixth century AD, vegetarianism had a profound influence on the political and the people. During the Vaishnavas, Thirumangai will become deep. Kulasekera and Alwar were kings. Nevertheless, in Tamil Nadu, the political status of vegetarianism has been very influential. The role of women in the history of the Tamil Bhakti movement was negligible. Andal was the forerunner and foremost of the women's role in their devotional movement. The piety of the year manifested as a deeper love than the piety of the subordinates of his time. He portrayed the romantic feelings of the world in different ways. This expression of sentiment is found in his devotional literature. The love between the leader and the leader evolves into a feeling of devotion to the Lord. Devotional literature regulates man and makes him live. It adheres to the norm with extremes and intuition, and lives from it. A pious morality with a high sense of purpose and a common purpose works in the interests of society. The purpose of this article is to illustrate how the pastures of this year describe the life of piety.

**Keywords:** Andal, Literature, Sixth century, Tamil Bhakti movement,

## ஆசிரியர் குறிப்பு



கடந்த எட்டு ஆண்டுகளாக உதவிப்பேராசிரியராகவும் தமிழ்த்துறைத் தலைவராகவும் பணியாற்றி வருகிறார். இவர் 7 - நூல்களையும், பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்குகளில் - 13, தேசியக் கருத்தரங்குகளில் -24, மாநில கருத்தரங்கில் -1, பன்னாட்டு ஆய்விதழ்களில் -32 என 70 ஆய்வுக்கட்டுரைகள் இதுவரை வெளிவந்துள்ளன. இவரின் இரண்டு கவிதைகளும் இணைய இதழில் வெளிவந்துள்ளன.

## முன்னுரை

ஆண்டாள் இயற்றிய பாசுரங்களில் வழிபாட்டு முறையில், ஒரு திட்டம் உருவாக்கி, அதை நிகழ்த்த இடம், காலம், உறுதி, செயலாக்கம், அதனால் விளையும் பயன் என்று நிருவாக மேலாண்மையே நிகழ்த்தப்படுகிறது. கடவுளை அடைய கையாளும் குறிக்கோள்களில் காதலும் ஒன்று ஏனென்றால் காதல், பக்தி இவை இரண்டுமே இறைவனை அடைவதற்குரிய அன்பின் முதிர்ந்த நிலையில் அமைவன. உலக உறவுகளில் தலைவன் தலைவிக்குரிய அன்பானது தூய்மையான ஒன்று. தன்னலம் இல்லாதது. இத்தகைய தூய அன்பு நிலையை ஆழ்வார்கள் பாசுரங்களில் விரவிக் கிடக்கிறது. இங்கு கி.பி.ஆறாம் நூற்றாண்டிற்குப் பிறகு சைவ சமயம் அரசியல் நிலையிலும், மக்கள் மத்தியிலும் செல்வாக்குடன் திகழ்ந்தது. வைணவ சமயத்தில் திருமங்கை ஆழ்வார். குலசேகர ஆழ்வார் ஆகியோர் மன்னர்களாகத் திகழ்ந்தவர்கள். இருப்பினும் தமிழகத்தில் அரசியல் நிலையில் சைவ சமயமே பெரும் செல்வாக்குப் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது (Narasimhan, 2004; John Carman, 1989; Krishna, 2009; Singaravelu Mudaliyar et al., 1931)

தமிழ்பக்தி இயக்க வரலாற்றில் பெண்களின் பங்களிப்பு மிகக்குறைவாகவே இருந்தது. தம் பக்தி இயக்கத்தில் பெண்களின் பங்களிப்புக்கு முன்னோடியாகவும் முதன்மையானவராகவும் திகழ்ந்தவர் ஆண்டாள். ஆண்டாளின் பக்திநெறி அவர் காலத்திய ஆழ்வார்களின் பக்திநெறியை விட ஆழமான காதலாக வெளிப்பட்டது. உலகியலிலுள்ள காதல் உணர்வுகளை வெவ்வேறு வகையில் இவர் சித்தரித்துள்ளனர். அத்தகு உணர்வு வெளிப்பாட்டினை, நாம் அவர்தம் பக்தி இலக்கியங்களிலும் காணலாகின்றது. தலைவன், தலைவியர் இடையிலான காதல் உணர்வு இங்குக் கடவுள் மீது ஆன்மா செலுத்தும் பக்தி உணர்வாகப் பரிணமிக்கிறது. பக்தி இலக்கியம் மனிதனை நெறிப்படுத்தி வாழச்செய்கிறது. புறத்தூய்மையுடனும், அகத்தூய்மையுடனும் ஒழுங்கு நெறியைக் கடைப்பிடித்து, அதிலிருந்து வழுவாமல் வாழச்செய்கிறது. உயரிய கொள்கையும், பொதுநலநோக்கும் கொண்ட பக்திநெறி சமுதாய நலனும் கருதி செயல்படுகிறது. இத்தகைய ஆண்டாளின் பாசுரங்கள் பக்திநெறி வாழ்வியலை எங்ஙனம் எடுத்துரைக்கின்றது என்பதை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும் (Narasimha Rao, 2008; Ramasubramaniam, 2009; Martha Ann Selby, 2011; Shivshankar Rao, 2013).

## ஆண்டாள் வளர்ந்த சூழல்

ஆண்டாளின் பிறப்பு குறித்த எவ்விதச் சான்றாதாரங்களும் கிடையாது. துளசிச் செடியின் அருகில் கண்டெடுக்கப்பட்டவர் என்று குறிப்பிடப்படுகிறது. பிறப்பு எத்தன்மையினதாக இருப்பினும் ஆண்டாள் முற்றிலும் வைணவச் சூழலில் வளர்க்கப்பட்டவராவார். ஆண்டாளின் வளர்ப்புத் தந்தை விஷ்ணுசித்தர் என்றழைக்கப்படும் பெரியாழ்வார் ஆவார். ஆண்டாளின் வளர்ப்புத் தந்தையான பெரியாழ்வார் ஆண்டாளுக்கு ஆசானாகவும் விளங்கினார். கண்ணன் கதைகளோடு உயரந்த தத்துவ ஞானக் கொள்கைகளையும் கற்பித்தார். பெரியாழ்வாருடன் திருமாலடியார்கள் பலரும் கூடி

உரையாடுவதையும் பக்தியுடன் அவர்கள் பாடுவதையும்", மனமுருகும் அப்பாடல்களுக்கு ஏற்ப ஆனந்தக் கூத்தாடுவதையும் குழந்தைப்பருவம் முதலே பார்த்து வளர்ந்ததால் திருமாலடியவர்களின் பக்தர்கள் குழுவில் இணைந்து இறைவனை மனமுருகிப் பாடலாயினார்.

"கோல் தேடி ஓடும்பொழுந்தே போன்றதே
மால் தேடி ஓடும் மனம்"(பூதத்தாழ்வார், இரண்டாம் திருவந்தாதி, 27)

என்ற நம்மாழ்வாரின் அனுபவம் ஆண்டாளுக்கும் ஏற்பட்டது. கண்ணன் மீது காதல் பெருகி வளர்ந்தது. பெரியாழ்வாரின் பணித்தலின் படி திருமாலுக்கு மலர்பறித்து மாலைகட்டி தினமும் சூட்டிவருவதே ஆண்டாளின் பணியாக இருந்தது. திருமாலுக்குச்சேவை செய்யும் பணிப்பெண்ணாகத் திகழ்ந்த ஆண்டாள் இறைவனாகிய திருமாலைக் காதலனாகவும், கணவனாகவும் பாவித்துப் பாடியவையே திருப்பாவையும், நாச்சியார் திருமொழியும் ஆகும். இவ்விரு படைப்புகளும் ஆண்டாளின் காதலைத் தலைவி கூற்றாக வெளிப்படுத்துபவை ஆகும். பக்திக் காதலின் உச்சத்தை ஆண்டாளின் பாடல்களில் காணமுடிகிறது. வைணவ ஆழ்வார்களுள் ஆண்டாள் தவிர ஏனையவர்கள் அனைவரும் நாயகன் - நாயகி பாவத்தில் தம்மைக் காதலியாகவும், இறைவனைக் காதலனாகவும் கொண்டு பக்திக்காதலை வெளிப்படுத்தினர். ஆண்டாளின் காதல் பாவனைக் காதல் அன்று. உண்மையிலேயே ஒரு பெண்ணின் பக்திக்காதலைப் பெண்ணுக்குரிய உணர்வுகளுடன் வெளிப்படுத்தியவை ஆண்டாளின் பக்திப் பாசுரங்கள் ஆகும். இவ்வகையில் பக்தி இயக்கத்தில் தனித்திறன் கொண்டவராக ஆண்டாளை அடையாளம் காணமுடிகிறது.

## சூடிக்கொடுத்த சுடர்க்கொடி நாச்சியார்

திருமாலின் மீது கொண்ட அன்பு, பக்தியாக வெளிப்பட்டுப் பின்பு காதலாக மலர்ந்தது. காதல் மிகுதியால் திருமாலைக் கணவனாகவே கருத ஆரம்பித்தாள். திருமாலுக்காகத் தொடுக்கப்பட்ட மாலையைத் தான் அணிந்து தன்னைத்தானே இரசித்துக் கொண்டாள். ஆண்டாளின் இச்செயலைப் பெரியாழ்வார் அறியாதிருந்தார். திருமாலுக்குக் கட்டிய மாலையைத் தானே சூடி அழகுபடுத்தித் தன்னை இரசித்துக் கொண்டிருந்த ஆண்டாளைப் பெரியாழ்வார் பார்த்துவிட்டார். இதனைப் பார்த்து அதிசயித்த பெரியாழ்வார் குற்றம் செய்துவிட்டாய் என்று ஆண்டாளைக் கண்டிக்கிறார். பின்னர் அவசர அவசரமாக நந்தவனத்தில் கிடைத்த பூக்களைப் பறித்து மாயாக்கி திருமாலுக்குச் சாத்தினார் பெரியாழ்வர். இந்நிலையில் இறைவன் பெரியாழ்வாரின் கனவில் தோன்றி ஆண்டாள் சூடிய மாலையையே தனக்குச் சாத்த வேண்டும் என்று கூறினார். தமிழ் பக்தி இயக்கத்தில் இது ஒரு முக்கிய நிகழ்வாகும். சைவத்திலும், வைணவத்திலும் அடியார்களுக்கு இறைவன் காட்சி தந்ததாகக் குறிப்பிடப்படுகின்றன. வைணவத்தில் இறைவன் ஆண்டாள் பொருட்டும், திருப்பாணழ்வார் பொருட்டும் மற்றொருவர் கனவில் தோன்றினார் எனக் கூறப்படுகின்றன. தாழ்த்தப்பட்ட குலத்தில் பிறந்த ஒருவரின் பொருட்டாகவும், பெண் பொருட்டாகவும் இறைவன் கனவில் தோன்றினார் எனக் குறிப்பிடுவது வைணவத்தின் சாதிபேதப்

பாகுபாடின்மையைக் காட்டுகிறது. சைவத்தைக் காட்டிலும் வைணவ சமயம் அடித்தட்டு மக்களை (தாழ்த்தப்பட்டவர்கள், பெண்கள்) சமூகநிலையில் சமமான நிலையிலேயே எண்ணியது என்பதற்கு இந்நிகழ்வு ஒரு சான்றாகிறது.

## திருப்பாவையும், நாச்சியார் திருமொழியும்

பக்தி இலக்கியங்களில் ஆண்டாளின் திருப்பாவையும் (30 பாடல்கள்), நாச்சியார் திருமொழியும் (143 பாடல்கள்) மிக முக்கியமானவை ஆகும். வைணவத் திருக்கோயில்களிலும், இல்லங்களிலும் தவறாது ஓதப்பெறும் சிறப்புப்பெற்றது திருப்பாவை ஆகும். நாச்சியார் திருமொழியில் இடம்பெறும் “வாரணம் ஆயிரம்“ கனவுப்பாடல்கள் வைணவ இல்லத்திருமணங்களில் தவறாது ஓதப்படுகின்றன. ”பாவை நோன்பு நாடு செழிக்கவும் நல்ல மழை பொழிய வேண்டுமென்றும், வழிபடும் கன்னிப் பெண்களுக்கு நல்ல கணவன்மார்களை அருள வேண்டுமென்றும் இம்மையில் எல்லாவகைச் செல்வங்களையும் பெற்று நல்வாழ்க்கை அமைய வேண்டும் என்றும் பலபடியாக வேண்டிக்கொண்டு மார்கழி மாதம் முப்பது நாட்களிலும் விடியற்காலையில் பொழுது புலரும் முன்பே நீராடி நோன்பு நோற்பர் என்பது திருப்பாவை திருவெம்பாவை நூல்களால் நன்கு விளங்குகிறது. இப்பாடல்கள் “எம்பாவாய்“ என்ற முடிவினைப் பெற்றிருத்தலால் பெண்பாலர்க்கே உரிய நோன்பென்பதை அறிய முடிகிறது” (ஆண்டாள், பக்கம் 23) என்ற கே.ஏ.மணவாளனின் கூற்று பாவைப்பாடல்களின் தனித்தன்மையைப் புலப்படுத்துகிறது. ஆண்டாளின் நாட்டுப்பற்றும், சமூகநலனும் முழுமையாகப் பிரதிபலிப்பது திருப்பாவைப் பாடல்களில்தான் எனக்கூறலாம். நாச்சியார் திருமொழி ஆண்டாளின் காதலை வெளிப்படுத்துவது. சங்ககால அகமரபு, பக்திமரபாக மாற்றம் பெற்றதை நாச்சியார் திருமொழியில் காணமுடிகிறது. வைணவ ஆழ்வார்களுள் ஆண்டாளும், சைவ நாயன்மார்களுள் மாணிக்கவாசகரும் பாவைப்பாடல்களைப் பாடி தமிழ்மரபின் தொன்மையான நோன்பு முறைகளைப் பதிவு செய்தனர். நோன்பு நோற்றல் தற்காலத்தில் “விரதம்“ என்ற பெயரில் அனைத்து சமயத்தினராலும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. சைவசமயத்துள் எந்தப் பெண்ணும் ஆண்டாள் அளவிற்குப் பக்திக் காதலை வெளிப்படுத்தியதாகத் தெரியவில்லை.

ஆண்டாள் கண்ணனை நினைத்து மனமுருகி திருப்பாவை நோன்பு நோற்றதற்கு ஒப்ப சைவத்துள் மாணிக்கவாசகர் மனமுருகி திருவெம்பாவை பாடியுள்ளார். சைவ சமயத்தவரினும் வைணவ சமயத்தவர் இறைவன்மீது காதலை வெளிப்படுத்திப் பாடியதில் முன்னிலை வகித்துள்ளனர். ஆண்டாள் பாடல்கள் இதற்குச் சான்றாக உள்ளன. பக்தி இயக்க காலத்தில் சைவமும், வைணவமும் தமக்குள் போட்டி போட்டுச் செயல்பட்டதை இதனால் அறியமுடிகிறது. ஆண்டாளின் நோன்பினை

”...........................................................என்புருகி

இணைவேல் நெடுங்கண்கள் இமை

பொருந்தா பலநாளும் துன்பக்கடல்

புக்கு வைகுந்தன் என்பதோர் தோணி
பெறாது புல்கின்றேன்" (நாச்சியார் திருமொழி. 47)

என்பன போன்ற பாடல்களால் அறியலாம். ஊண் மறந்து, உறக்கம் மறந்து, கண்களில் நீர்ப்பெருக கண்ணனையே நினைந்து நினைந்து நைந்து உருகியவர் ஆண்டாள். கண்ணன்மீது கொண்ட காதலில் உச்சத்தில் "மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழ்கில்லேன் என்ற மனநிலைக்குச் சென்றவிட்டாள் என்றால் அவளது காதலைஎண்ணி வியக்காமல் இருக்க முடியாது. நாச்சியார் திருமொழியில் இடம்பெறும் பாடல்கள் காதலின் உச்சநிலையைக் காட்டுவனவாகும்.

"மாமுத்த நிதி சொரியும் மாமுகில்காள் வேங்கடத்துச்
சாமத்தின் நிறங்கொண்ட தாளான் வார்த்தையென்னே
காமத் தீயுள் புகுந்து கதுவப்பட்டிடைக் கங்கல்
ஏமத்தோர் தென்றலுக்கு இங்கிலக்காய் நான் இருப்பேன்"
-(நாச்சியார் திருமொழி.75)

காமத்தீயானது புறஉடம்பு முழுவதையும் எரித்துவிட்டு உள்ளே புகுந்து எரிக்க முயல்கிறதே என்றும், தென்றல் காற்று காமத்தை மேலும் மிகுவிக்கிறதே என்றும் ஆண்டாள் பாடுவது தமிழ் அகமரபின் சாயலைப் பக்திக்காதலாக ஆண்டாள் வெளிப்படுத்தும் திறத்தைக் காட்டுகிறது. திருமாலைத் திருமணம் செய்வதாகக் கண்ட கனவினைக் கூறும் "வாரணமாயிரம்" பாடல்கள் தமிழ் பக்தி இலக்கிய மரபில் புதுமையானவை ஆகும். பிற ஆழ்வார்களின் காதலைவிட ஆண்டாளின் காதலே உயர்வானதாகத் தோன்றுகிறது. தமிழ்ப் பக்தி இயக்கத்தில் ஆண்டாளின் பாடல்கள் முழுவீச்சுடன் செயல்பட்டன. பெண்களை வெறுக்கும் சமயங்களுக்கு மத்தியில் வைணவம் ஆண்டாளுக்கு உயரிய இடம்கொடுத்தது பக்தி இயக்க வளர்ச்சியில் வைணவத்தின் பங்களிப்பினைக் காட்டுகிறது.

## நோன்பு என்பது

நோன்பு என்பது ஏதேனும் ஒரு காரணம் கருதி, மன உணர்வுகளைக் கட்டுப்படுத்தி, இறைவனையே சிந்தித்து, தான் எண்ணியது ஈடேற நோற்பது நோன்பு ஆகும். இதையே வள்ளுவர்,

வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப் படும் (குறள்-265)
என்றும்,
கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட்டவர்க்கு (குறள்- 269)

என்னும் குறள்களின் வழி உணர்த்துகிறார். சாவித்ரி நோற்ற நோன்பும், மார்கண்டேயன் மேற்கொண்ட தவமும் எத்தகைய ஆற்றலுடையது என்பதை நம் புராணங்கள் உணர்த்துகின்றன. அவையே இலக்கியங்களில் பின்னர் இடம்பெற்றுள்ளன.

## ஆண்டாளின் நோன்பு

சங்க இலக்கியங்களில் பாவை நோன்பு நோற்கப்படுகிறது. அதை வழிவழியாக தமிழகப் பெண்கள் நோற்று வருகின்றனர். அந்தப் பாவை நோன்பைத் திட்டமாகக் கொண்டு ஆண்டாள் தன் குறிக்கோளை நிறைவேற்றுகிறாள். பரிபாடல் உணர்த்தும் "அம்பா வாடல்" தான் தைந்நீராடல் என்றும் பின்னர் பக்திக் காலத்தில் மார்கழி நீராடல் என்றும் வழங்கி வந்துள்ளது.

"வையெயிற்றவர் நாப்பண் வகை அணிப்பொலிந்து - நீ
தையில் நீராடிய தவம் தலைப்பாடு வாயோ" (கலி.59:12-13)

என நல்ல கணவனை அடைய சங்க கால மகளிர் பார்வதிதேவியை நோக்கித் தைநீராடி "பாவை நோன்பு நோற்றனர்" என்கிறது பரிபாடல். அதையே ஆண்டாள் மார்கழி நீராடி, பாவை நோன்பு நோற்று, கண்ணனையே தான் கணவனாக அடைய வேண்டுகிறாள். இது குறிக்கோள் இதனை அடைய மேற்கொள்ளும் முயற்சிகள் திருப்பாவையில் சிறப்பாக உணர்த்தப்படுகின்றன.

## குறிக்கோளும் செயல்முறையும்

திருப்பாவை முப்பது பாடல்களும் மார்கழி நோன்புக்குரிய வழிமுறைகளை வரிசைப்படுத்துகின்றன. திருப்பாவை ஓர் ஆற்றுப்படைபோல், பெண்களை இலக்குநோக்கி அழைத்துச் செல்கிறது. தலைவியாக ஆண்டாள் செயல்பட்டு இலக்கில் வெற்றி காணுகிறாள்.

## நோன்பு நோற்கும் காலமும் இடமும்

ஆண்டாளும் தம் தோழியரும், மார்கழி நோன்பு நோற்க முடிவு கொள்கிறார்கள்.

"மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்
சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமிர்காள்" (திருப்பாவை 1-1.3)

என்று மார்கழி மாதத்தில் "பாவைக்களம்" அமைத்தும் அதில் ஒன்று கூடி மழை வேண்டியும், பெண்களுக்கு நல்ல கணவன் வேண்டும் என்றும் வழிபாடு செய்கின்றனர். அப்போது அவர்கள் மேற்கொள்ளும் உறுதிமொழிகள், தங்களைக் கட்டுப்பாட்டுடன் செயல்பட நெறிப்படுத்துகிறது.

"பிள்ளைகள் எல்லோரும் பாவைக்களம் புக்கார்"(திருப்பாவை.13-3)

என வழிபடும் இடத்தில் கூடி வழிபடுகின்றனர்.

தூய்யோமாய் வந்துநாம் தூமலர் தூவித்தொழுது
வாயினால்பாடி மனத்தினால் சிந்திக்கப்
போய பிழையும் புகுதரு வானின்றனவும்
தீயினில் தூசாகும் செப்பேலோர் எம்பாவாய். (திருப்பாவை-5)

என்ற புற, அகத்தூய்மையுடன் வந்து, மலர்த்தூவி பாடிப் பரவுகின்றனர். அதனால் அவர்களின் நிலை உயர்கிறது.

## வழிபாட்டு முறைகள்

இங்கு, அவர்கள் மேற்கொள்ளும் விதிமுறைகள் வரிசைப் படுத்தப்படுகிறது.

"வையத்து வாழ்வீர்காள்! நாமும்நம் பாவைக்குச்
செய்யும் கிரிசைகள் கேளீரோ பாற்கடலுள்
பையத்துயின்ற பரமனடி பாடி
நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்களாலே நீராடி
மையிட்டு ஏழுதோம் மலரிட்டு நாம் முடியோம்
செய்யாதன செய்யோம் தீக் குறளைச் சென்றோதோம்
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமாறு எண்ணி உகந்தே லோர் எம்பாவாய்" (திருப்பாவை.2)

என, நோன்பு காலத்தில் பெண்கள், நெய், பால், மலர், மை போன்ற பொருட்களைப் பயன்படுத்துவதில்லை, குறிக்கோள் நிறைவேறும் வரையில் வேண்டாதன செய்யாமலும், நல்லறங்கள் செய்தும், மனம்பிற எண்ணங்களால் அலையாமல், நிலைப்பட இறைநாமம் போற்றுதல், மகளிரால் பின்பற்றப்படுகிறது.

## நேர மேலாண்மை

பாவை நோன்பில் நீராடலே முதன்மைச் செயல், பின்பு பாவைக்களம் புகுந்து வழிபாடு செய்தல். இந்த அதிகாலைப் பொழுது, புனிதமானது. அப்பொழுதில் செய்யப்படும் காரியங்கள் சிறப்பாக அமையும். ஆதலால் அப்பொழுதில் வழிபடத் துணிகிறார்கள். கூட்டு வழிபாட்டு முறையில், பெண்கள் ஒருவரைஒருவர் எழுப்பிக் கொண்டு கூடிச்சென்று ஆறு, குளங்களில் நீராடுவர். அந்த அதிகாலை நேரத்தைத் தவறாமல் அவர்கள் கடைப் பிடித்துள்ளனர். தவறியவர்களை இடித்துரைத்தும், கேலிசெய்தும் அவர்களைச் செயலூக்கம் கொடுத்து அழைத்துச் செல்லும் பாங்கு போற்றுதற்குரியதாகும். இன்று நேர மேலாண்மை நிர்வாகப் பணியில் உயர்வாகப் பேசப்படுகிறது.

"எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும்
நங்காய்! எழுந்திராய் நாணாதாய்! நாவுடையாய்
சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்
பங்கயக் கண்ணானைப் பாடேலோர் எம்பாவாய்" (திருப்பாவை 14-5-8)

என்று ஆண்டாள் எழுப்பி அழைத்துச் செல்கின்றாள். இங்கு,

"ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தாய் செயின்" (குறள் - 484)

என்ற குறளின் வழி இடம் காலம் கருதி செயல்பட்டுள்ளனர்.

## நோன்பின் பயன்

இவ்வழிப்பாட்டு முறையால் மகளிர் பெறும் பயன் யாது என்றால், நல்ல மழை பெய்தல், நாட்டின் வளம் பெறுதல், பெண்களின் மனம் குளிர்தல் நல்ல கணவன் பெறுதல் ஆகும்.

"ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம் பாவைக்குச் சாற்றி நீராடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாறி பெய்து
ஓங்கு பெருஞ் செந்நெல்..." (திருப்பாவை - 3)

## கூட்டு வழிபாட்டால் மகளிர் பெற்ற பரிசுகள்

ஆண்டாளின் தலைமையில் பெண்கள் கூடி மனக்கட்டுப்பாட்டுடனும், மன உறுதியுடனும் வழிபட்டு, நாட்டு நலம் வேண்டி, முறையிட்டு கண்ணனிடம் பரிசுகளும் பெறுகின்றனர். அவர்கள் பெரும் பரிசுகள்,

"பாடிப் பறைகொண்டு யாம்பெறு சம்மானம்
நாடு புகழும் பரிசினால் நன்றாகச்
சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே
பாடகமே என்றனைய எல்கலனும் யாமணிவோம்
ஆணையுடுப்போ மதன்பின்னே பாற்சோறு
மூட நெய் பெய்து முழங்கை வழிவாரக்
கூடியிருந்து குளிர்ந்தேலோர் எம்பாவாய்" (திருப்பாவை 27)

நோன்பினை முடித்து, அணிகலன் பூண்டு, ஆடை உடுத்தி பால்சோறு படைத்து கூடி இருந்து மகிழ்ந்து, "ஏழேழ் பிறவிக்கும் உன்னை நினைந்து வணங்கி உனக்கு ஆட்செய்து வாழ அருள் புரிய" வேண்டிப் பெறுகின்றனர். நோன்பு முடித்து அக்கார அடிசல் கண்ணனுக்குப் படைத்த நோன்பை நிறைவு செய்கின்றனர்.

"மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம்
செய்திட வேண்டுமம்மா அவர்
பங்கையர்க் கைநலம் பார்த்தல்லவோ
பாரினில் அறங்கள் வளருதம்மா" (கவிமணியின் கவிதைகள்.752)

என்று பாடிய கவிமணியின் வரிகள் ஆண்டாளின் கூட்டு வழிபாட்டுக்குப் பொருந்துவதாய் அமைந்துள்ளது.

## தலைவன் - தலைவி நிலை

இலக்கியத்தில் பொதுவாகக் காதலரைக் குறிக்கச் சுட்டப்பட்டு வந்த "தலைவன் - தலைவி" என்ற சொற்கள் பக்தி இலக்கியத்தில் "நாயகன் - நாயகி" என்று மாற்றம் பெற்றன.

”இறைவன் - ஆன்மா என்பவற்றுக்கிடையிலான தெய்வீக உறவு, தலைவன் - தலைவிக்கிடையிலான உலகியல் உறவாகப்பாவனை செய்யப்படுதலையே நாயகன் - நாயகி என்ற தொடர் உணர்த்துகிறது. இந்த முறையில், திருமாலைத் தலைவனாகவும், உயிரைத் தலைவியாகவும் வைத்து விளக்கும் பாசுரங்கள் பற்பல, அருளிச் செயலில் இடம்பெற்றுள்ளன, இறைவன் ஒருவனே ஆண் மற்ற சீவன்கள் அனைத்தும் பெண் நாம் ஒவ்வொருவருமே இறைவனால் அனுபவிக்கப்பட வேண்டியவர்கள்“ என்பதே வைணவர் கொள்கை.

## தலைவன் பெயர் சூட்டுதல்

தலைவியின் உடன்போக்கிற்கு முன் நற்றாய் தலைவனின் பெயரை அறிந்து இத்தன்மை உடையவன் என்று கூறும் கூற்று இலக்கண நூல்களில் சுட்டப்படவில்லை. ஆனால், திருமங்கையாழ்வார் பல இடங்களில் தன்னைத்தாயாகப் பாவித்துக்கொண்ட இத்தன்மை கொண்ட திருமாலே என் மகளுக்கு நோய் செய்தான்” என்று தலைவன் பெயரைச் சுட்டுகிறார். மாகிக் பார்வை போன்ற அழகிய பார்வையை உடையவளான என் மகள் நீண்ட கண்கள் நீர் நிரம்பப் பெற்றிருக்கிறாள். இவளது வளைகளும் கையில் நின்று நழுவுகின்றன. தேன் நிரம்பிய மணம் மிக்க திருத்துழாயினால் ஆயி (பெருமானின்) மாலையினுடைய பெருமைகளைச் சொல்லிக்கொண்டு உறக்கமற்று இருக்கிறாள். இந்நிலைமையைக் கண்டுகொண்டு பாருங்கள். காடிலே திரிபவனும் காவலுள்ள வீடுகளிலும் தயிரை உண்டு, நெய்யைக் குடிக்கும்படியாக நந்தகோபர் பெற்ற கண்ணபிரானாகிய பெருமான், என் பெண் பிள்ளைக்குச் செய்த துன்பங்களை, பெண்களே நான் அறிய முடியவில்லை என்று கூறுகிறார்.

”மானாண மென்னோக்கி வாணெடுங்கண்
நீர்மல்கும் வளையும் சோரும்
தேனாய நறுந்துழா யலங்கலின்
திறம்பேசி யுறங்காள் காண்மின்
காளாயன் கடிமனையல் தயிருண்டு,
நெய்பருக, நந்தன் பெற்ற
ஆனாயன் என்மகளைச் செய்தனகள்
அம்மனைமீர் அறிகி லேனே” (பெரிய திருமொழி 5-5.3)

என்ற பாசுரத்தில், “நந்தகோபாலர் பெற்ற மகன் கண்ணனே தன்மகளின் காதல் நோய்க்கு காரணம் என்று தாய் கூறுகிறார்.

## தலைவனிடம் துழாய் வேண்டுதல்

தலைவனிடம் மாலை வாங்கி வரத் தலைவி அஃறிணைப் பொருட்களையே தூது விடுப்பது மரபு. ஆனால் நம்மாழ்வார், தாயே நேரடியாகத் தலைமகளின் நோய்தீர, தலைவனிடம் திருத்துழாய் மாலை தரும்படி வேண்டுவதை,

"இவனிராப் பகல்வாய் வெரீஇதன
குவளையொண் கண்ணநீர் கொண்டாள் வண்டு
திவளும்தண் ணந்துழாய் கொடீர், என
தவள வண்ணர் தகவுகளே" (திருவாய்மொழி2-4.5)

என்ற பாசுரத்தில் காணலாம். இரவும் பகலும் என் மகள் உம்மையே எண்ணி வாய்புலம்புகிறாள். குவளைப்பூ போன்ற அவள் கண்களில் நீர் நிரம்பிவிட்டது. வண்டு தங்கும் குளிர்ந்த உமது திருத்துழாய் மாலையினை அவளுக்குத் தரலாகாதோ? அடியார்க்கு உதவுவதில் தூயதன்மை உம்மிடம் இருப்பது நம்புவதற்கு இல்லையே என்கிறாள். இஃது அகமரபின் மாறுபட்ட புதுமையே எனலாம்.

## தலைவி நிலை பற்றித் தலைவனிடம் கூறல்

காதல் நோயால் மகள் தவிக்கும் நிலையினைத் தாய், தலைவனிடம் கூறும் மரபு, இலக்கண நூல்களிலோ, சங்க இலக்கியத்திலோ எங்கும் சுட்டப்படவில்லை. ஆயினும் ஆழ்வார் பாடல்களில் பல இடங்களில் தன் மகள் படும் துன்பங்களை எடுத்துக்கூறி, நீ செய்ய இருப்பது என்ன? என்று தலைவனை வினவும் நிலை காணப்படுகிறது. கலவைச் சந்தனத்தையும் முத்து வடத்தையும், சந்தனக் குழம்பையும் கொங்கைகளில் பூசனாலும் அவை நெருப்பு போல ஆகின்றன. நிலவின் கதிர்கள் சுடுவதால் வருந்துகிறாள். கடல் ஒலித்தாலும் இவளும் கூக்குரலிடுகிறாள். மான் தளிர் போலும் இவளுடைய உடம்பின் நிறம் பசலைநோயால் பொன் போலாகிறது. வளையல்கள் சிறிது பொழுதும் கைகளில் தங்குவது இல்லை. இப்படி மெலியும் என் மகளுக்கு இடவெந்தை பிரானே, என்ன செய்ய நினைத்திருக்கிறாய்? என்று வினவுவதனை,

"சாந்தமும் பூஹம சந்தனக் கழம்பும்" (பெரிய திருமொழி2-7.3)

என்ற பாசுரம் மகளின் நோயினைத் தலைவனாகிய இறைவனிடம் தாய் எடுத்துக் கூறுவதாய் அமைந்துள்ளது.

## உடன்போக்கு

தலைவனுடன் தலைவி, உடன்போக்காகச் சென்ற நிலையில், தலைவனைப்பற்றிப் பலவாறு கூறும் நிலையே, சங்க இலக்கியத்தில் காணப்படுகிறது.

"மையணற் காளை பொய்புக லாக

அருஞ்சுரம் இறந்தனள்” (நற்.173)
”ஏதிலன் மொய்ம்மொழி நம்பி” (அகம்.117)
”கூர்வேல் விடலை பொய்ப்பப் போகி” (அகம்.315)
”நெஞ்சுணத் தேற்றிய வஞ்சினக் காளை”(ஐங்குறுநூறு.372)

எனச் சங்க இலக்கியங்களில் தலைவன் பலவாறு கூறப்பெற்றுள்ளான்.

## தலைவனது நோக்கு

தலைவனது அழகைக் குறித்தோ, தலைவன் தன்னை நோக்கிய நிலை குறித்தோ சங்க இலக்கியத் தலைவி விரிவாகப் பேசுவது இல்லை. ஆனால் பரகாலநாயகியோ,

”பொன்னிவர் மேனி மரக தத்தின்” (பெரிய திருமொழி 9-2.1)

என்ற பாசுரத்தில், தலைவனின் அழகைக் குறித்தும், தலைவன் தன்னை நோக்கியமை குறித்தும் தோழியிடம் வெளிப்படையாகவே கூறுகிறாள். ஆனால், தொல்காப்பியர், தலைவியின் காதலைத் தோழி, தானாகவே உய்த்தறிவாள் என்றும், இக்கட்டான சூழலில் மட்டுமே தலைவி தனது காதலைத் தோழியிடம் வெளிப்படுத்துவாள் என்றும் இலக்கணம் வகுத்துள்ளார்.

## முடிவுரை

1. இன்று நிர்வாக மேலாண்மையில், ஒரு காரியத்தைச் செய்து முடிக்க முதலில் திட்டம் உருவாக்குகின்றனர்.
2. அதை முடிக்க வேண்டிய வழிமுறைகள், செயல்பாடுகள் அதனால் விளையும் பயன் என்று ஆய்ந்து அறிந்து செம்மையாக முடிப்பதை, நிர்வாகத்திறமை என்கின்றனர்.
3. இந்த உத்திகள் ஆண்டாளின் திருப்பாவையில் திறம்பட அமைக்கப்பட்டுள்ளது.
4. பக்தி இலக்கியம் மூலமும் தனிமனித மேம்பாடும், சமுதாய மேம்பாடும் பெற முடியும் என்பதனை ஆண்டாளின் திருப்பாவை, நயம்பட உரைக்கிறது. பாடிப்பரவுவோம், பல்நலனும் பெறுவோம்.
5. காதல் என்பது ஒத்த உயிர் இனத்தில் மட்டுமே தோன்றுவதில்லை. அது கண்டம் விட்டு கண்டம் தாண்டி மண்ணுலக மங்கைக்கும் விண்ணுலக இறைவனுக்கும் இடையிலும் கூட பாலம்போட்டு நர்த்தனமாடும் என்பதை இங்கு மேற்கண்ட ஆண்டாள் பாசுரப் பாடல்களின் ஆய்வு மூலம் அறியப்பட்டுள்ளதையும் இத்தகைய காதல் பக்தியின் உச்ச நிலையில் உள்ளக்கிடக்கை என்பதையும் கண்டுணரலாம்.

## References

C. V. Narasimhan, (2004) The Tamil language: A brief history of the language and its literature, Indian Institute of Technology Madras.

John Carman, (1989). The Tamil Veda: Pillan's Interpretation of the Tiruvaymoli. Chicago: University of Chicago Press. p. 4.

Krishna (2009) Book of Vishnu. Penguin Books India. p. 136.

Singaravelu Mudaliyar, A., Apithana Cintamani, An encyclopaedia of Tamil Literature, (1931) - Reprinted by Asian Educational Services, New Delhi (1983).

Narasimha Rao P.V.L., (2008) Kanchipuram – Land of Legends, Saints & Temples. New Delhi: Readworthy Publications (P) Ltd. p. 27.

Ramasubramaniam, V.T., (2009) Natrinai (Moolamum Uraiyum), Thirumagal Nilayam, Tamil nadu, India.

Martha Ann Selby, (2011) Tamil Love Poetry: The Five Hundred Short Poems of the Aiṅkuṟunūṟu, an Early Third-Century Anthology. Columbia University Press, pp. 1-6.

Shivshankar Rao, (2013) Saints - Andal. Sushmajee: Dictionary of Hindu Religion, US Brahman Group.

**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License